| | |
|---|---|
| GENERAL TAMIL QUESTIONS | – 100 QUE. |
| TOTAL MARKS | – 150 (1 X 1 ½ Marks) |
| TIME DURATION | – 1 ½ HOURS |

# பொதுத் தமிழ்

1) கீழ்க்கண்டவற்றுள் எது காரணச் சிறப்பு பெயராகும்
[A] தென்னை [B] வளையல்
[C] பறவை [D] காடு

2) "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மானம் பெரிது" என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய மன்னன்"
[A] அதீதி [B] மருதுபாண்டி
[C] தொண்டைமான் [D] வல்லவராயன்

3) திருவாரூர்மணிமாலை என்னும் நூலில் இடம் பெறாத பாவகை?
[A] வெண்பா [B] ஆசிரியப்பா
[C] கட்டளைகலித்துறை [D] வஞ்சிப்பா

4) மோசிக்கீரனார் பாடிய பாடல்கள் இடம் பெற்ற நூல்____________________
[A] பழமொழிநானூறு [B] ஐங்குறுநூறு
[C] அகநானூறு [D] புறநானூறு

5) உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளை தேர்க
"நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கணியராயினும்"
[A] வெறுப்பூட்டுவர் [B] உதவ மாட்டார்
[C] துன்புறுத்தினார் [D] நட்பு கொள்ளார்

6) "தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்" என்று கூறியவர்
[A] வீரமாமுனிவர் [B] கால்டுவெல்
[C] ஜியுபோப் [D] சீகன்பால்கு

7) சரியான விடையைத் தேர்க
"மின்னோர் தனியாழி வெங்கதிரோன் றேனையது தன்னே ரிலாத தமிழ்" என தமிழின் தொன்மையை பறைசாற்றுவது
[A] தொல்காப்பியம் [B] தண்டியலங்காரம்
[C] பன்னிரு பாட்டியல் [D] நவநீத பாட்டியல்

8) மலையமான் மக்களை கிள்ளிவளவன் யானையின் கால் கீழிட்டுக் கொல்ல முற்பட்ட பொழுது தடுத்து நிறுத்திய புலவர்
[A] கபிலர் [B] கோவூர்கிழார்
[C] மோசிக்கீரனார் [D] ஔவையார்

9) திரிசரபுரம் மலைக்கோட்டையில் உள்ள சிற்பங்கள் யார் காலத்தவை?
[A] சேரர் காலத்தவை [B] சோழர் காலத்தவை
[C] பாண்டியர் காலத்தவை [D] பல்லவர்காலத்தவை

10) பண்டைய காலத்தில் "பாடி வீடுகள்" என்பது
[A] அரசனும் படைத்தலைவர்களும் இளைப்பாறும் இடம்
[B] படைவீரர்கள் ஒட்டு மொத்தமாக குடியிருக்கும் வீடுகள்
[C] ஆயர்பாடிகள் குடியிருக்கும் இடம்
[D] புலவர்கள் தங்கும் செல்லும் விடுதிகள்.

11) திரு.வி.க பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?
I. இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார்
II. நவசக்தி இதழில் ஆசிரியராகவும் பணியாற்றினார்
III. பொதுமை வேட்டல் முன்னூற்று நாற்பது பாக்களால் ஆனது
IV. இவர் மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார்.

[A] I & III மட்டும் சரியானவை
[B] I, II மட்டும் IV சரியானவை
[C] I & II மட்டும் சரியானவை
[D] இவை அனைத்தும் சரியானவை

We Shine Academy ™

12) கீழ்க்கண்டவற்றில் மரபுப்பிழை உள்ள சொற்களை கண்டறிக?

[A] யானைக் கன்று [B] எருமைக் கன்று

[C] மான் கன்று [D] [A], [B] இரண்டும்

13) செயல் முடிந்ததை குறிக்கும் சொல்__________

[A] வினையாளணையும் பெயர்

[B] வினையெச்சம்

[C] வினைமுற்று [D] வினைத்தொகை

14) கீழ்க்கண்டவற்றில் அங்கக வேளாண்மை என்பது?

[A] பூஜ்யமாதிரி வேளாண்மை

[B] இயற்கை வேளாண்மை

[C] செயற்கை வேளாண்மை

[D] இடமாற்று வேளாண்மை

15) சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக் கலையை இடைக்காலத்திற்கு பின் மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள்

[A] சேர பேரரசர்கள் [B] சோழ பேரரசர்கள்

[C] பாண்டிய பேரரசர்கள் [D] பல்லவ பேரரசர்கள்

16) பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க

| | பட்டியல் ஒன்று | | பட்டியல் |
|---|---|---|---|
| a. | நெல்லுக்கு | 1 | தேரோட |
| b. | வாழைக்கு | 2 | வண்டோட |
| c. | கரும்புக்கு | 3 | நண்டோட |
| d. | தென்னைக்கு | 4 | ஏரோட |

| | a | b | C | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 2 | 3 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 2 | 1 | 3 | 4 |

17) தமிழ்மொழி எத்தனை ஒலிகளைக் கொண்டுள்ளது

[A] முப்பது [B] ஐந்நூறு

[C] இருநூற்று [D] அறநூறு

18) .“எவ்வழி நல்லார் ஆடவர்; அவ்வழி நல்லை; வாழியநிலனே?” - என்ற பாடல் இடம் பெற்ற சங்க இலக்கிய நூல்?

[A] அகநானூறு [B] புறநானூறு

[C] பதிற்றுப்பத்து [D] பட்டினப்பாலை

19) முன்பே பன்னிரண்டு ராசிகள் இருந்தது பற்றி அறிய உதவும் சங்க கால நூல்?

[A] நெடுநெல்வாடை [B] குறிஞ்சிப்பாட்டு

[C] முல்லைப்பாட்டு [D] முதுமொழிக்காஞ்சி

20) கீழ்க்கண்டவற்றுள் முதல் ஆழ்வார்களால் பாடப் பெற்ற ஸ்தலமாக அறியப்படுவது?

[A] திருக்குறுகை [B] திருநெல்வேலி

[C] திருநின்றவூர் [D] திருவல்லிக்கேணி

21) தாராசுரம் ஐராதீசுவரர் கோயில் கீழ்க்கண்ட யாரால் கட்டப்பட்டது. அது எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது?

[A] முதலாம் இராசராசசோழன்/ 900ஆண்டுகள்

[B] இரண்டாம் இராசராசசோழன்/ 800ஆண்டுகள்

[C] இரண்டாம் இராஜேந்திரசோழன்/ 800ஆண்டுகள்

[D] முதலாம்குலோத்துங்கச்சோழன்/ 900ஆண்டுகள்

22) தாராசுரம் கோயிலின் அமைப்பு வான்வெளி ரகசியத்தை காட்டுவதாக கூறியமேல்நாட்டு அறிஞர்

[A] சார்லஸ் கார்ல்/ Charlescarl

[B] கார்ல்சேகன்/ Carlsagon

[C] பெட்ரிக் ஏங்கல்ஸ்/ Fredrick Angles

[D] மாக்ஸ் முல்லர்/ Max Muller

23) சிலையின் முன்புறம் மட்டும் தெரியுமாறு சுவர்களில் வடிப்பது

[A] உண்மைச் சிற்பம் [B] முழுச் சிற்பம்

[C] படைப்புச் சிற்பம் [D] புடைப்புச் சிற்பம்

WeShine Academy

24) அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகளைக் கூறும் கல்வெட்டு எழுத்து தலைப்புகளுடன் கூடிய சிற்பங்கள் காணப்படுவது
[A] காஞ்சி கைலாசநாதர் கோயில்
[B] தஞ்சை பெரிய கோயில்
[C] ஐராதீசுவர் கோயில்
[D] கங்கை கொண்ட சோழபுரம்

25) கீழ்க்கண்டவற்றுள் செழுமையான சமண கால கோயில் சிற்பங்கள் காணப்படும் இடமாக அறியப்படுவது
[A] ஆழிகுடி [B] ஆலங்குடி
[C] தீபங்குடி [D] திரிச்சூழி

26) மடங்களிலே மறைந்து கிடந்த தமிழை மக்கள் மடியிலே தவழச் செய்தவர்
[A] மறைமலையடிகள் [B] குன்றக்குடி அடிகளார்
[C] உ.வே.சாமிநாத ஐயர் [D] பரிதிமாற் கலைஞர்

27) 1867-ஆம் ஆண்டு மேரிகியூரி அம்மையார் எங்கு பிறந்தார்
[A] ஹாலந்து [B] நெதர்லாந்து
[C] போலந்து [D] கிரின்லாந்து

28) கல்வியின் சிறப்பு குறித்து அழகாக எட்டுத்திக்கும் எடுத்துரைத்தவர்
[A] நாற்கவிராச நம்பி [B] மூன்றுறை அரையனார்
[C] பெருவாயின் முள்ளியார்
[D] உருத்திரங் கண்ணனார்

29) நடுவண் அரசு தமிழ்த் தாத்தா உ.வே.சா-வின் எத்த னையாவது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது
[A] 150-வது [B] 125-வது
[C] 100-வது [D] 75-வது

30) தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் பதிப்பித்த வெண்பா,உலா,கோவை,அந்தாதி நூல்கள்முறையே:
[A] 3, 6, 9, 13 [B] 9, 6, 3, 13
[C] 13, 9, 6, 3 [D] 13, 3, 9, 6

31) "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையோர் <u>என்பும்</u> உரியர் பிறர்க்கு" - இங்கு என்பு என்பதன் ஆங்கிலச்சொல்?
[A] Soul [B] Bone
[C] Friends [D] Foe

32) "உழவர் ஏரடிக்கும் சிறுகோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்" என்று பாடியவர்
[A] கம்பர் [B] ஔவையார்
[C] ஒட்டக்கூத்தர் [D] திருவள்ளுவர்

33) தோலுக்குக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதை தடுக்க இந்திய அரசு எந்த ஆண்டு முதன் முதலாக வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை இயற்றியது
[A] 1966 [B] 1972
[C] 1986 [D] 1988

34) சந்திப் பிழையை நீக்கித் தேர்க?
[A] சேலையை தழைய தழைய உடுத்தினாள்
[B] சேலையை தழையத் தழைய உடுத்தினாள்
[C] சேலையைத் தழையத் தழையத் உடுத்தினாள்
[D] சேலையைத் தழையத் தழைய உடுத்தினாள்

35) சங்க இலக்கியம் எத்தனை ஆண்டுகள் பழைமை வாய்ந்தது?
[A] ஐயாயிரம் [B] ஒராயிரம்
[C] ஈராயிரம் [D] நான்காயிரம்

36) கீழ்க்கண்டவற்றுள் எந்த சுட்டெழுத்து தற்போது புழக்கத்தில் இல்லை
[A] அ [B] இ
[C] உ [D] இம்மூன்றும்

37) அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க
[A] அம்மா, அப்பா, அண்ணி, அங்காடி, அன்னம்
[B] அங்காடி, அண்ணி, அப்பா, அம்மா, அன்னம்
[C] அப்பா, அண்ணி, அம்மா, அன்னம், அங்காடி
[D] அங்காடி, அண்ணி, அம்மா, அப்பா, அன்னம்

We Shine Academy™

38) எல்லாரிடமும் இனிய சொற்கள் பேசுவோரிடம் எது அணுகாது என வள்ளுவர் கூறுகிறார்?

[A] இம்மை அணுகாது [B] வறுமை அணுகாது

[C] சிறுமை அணுகாது [D] மறுமை அணுகாது

39) சிற்றூர்களான வல்லநாடு மற்றும் முரப்பநாடு இடையே ஓடும் நதி

[A] சிற்றாறு [B] சேர்வலாறு

[C] தாமிரபரணி ஆறு [D] கோதண்டராம ஆறு

40) பன்னிரு ஆழ்வார்களில் நடுவரான நம்மாழ்வார் பிறந்த இடம்

[A] ஆழ்வார்கற்குளம் [B] ஆழ்வார்க்குறிச்சி

[C] ஆழ்வார்மங்களம் [D] ஆழ்வார்த்திருநகரி

41) வீரமும் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும் என்று எடுத்துரைத்தவர்

[A] வேதாந்த மகரிஷி [B] வேதாந்த பாஸ்கர்

[C] சன்மார்க்க கவி [D] புரட்சித் துறவி

42) "உன் வாழ்வை பற்றி பெரிதாக எண்ணாதே" என்று கூறியவர்?

[A] பாம்பாட்டி சித்தர் [B] குதம்பை சித்தர்

[C] அழுகுணிச் சித்தர் [D] கடுவெளி சித்தர்

43) "தழையா வெப்பம் தழைக்கவும்" இந்த தொடரில் தழை என்பது

[A] பெயர்ச்சொல் [B] வினைச்சொல்

[C] இடைச்சொல் [D] காலச்சொல்

44) கீழ்க்கண்ட யாருடைய கவிதை நூல்கள் நூற்றாண்டின் இக்கால இலக்கியத்துறைக்குப் புதிய சிறப்புகளை சேர்த்திருக்கின்றன

[A] தருமு சிவராமு [B] சுந்தர ராமசாமி

[C] ந. பிச்சமூர்த்தி [D] கலாப் பிரியா

45) முற்காலத்தில் கோழி மாநகரம் என அழைக்கப்பட்ட பண்ணைடய நகர்

[A] காவிரிபூம்பட்டினம் [B] முசிறி

[C] கொற்கை [D] உறையூர்

46) ஈசானதேசிகர் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது

I. திருவாரூர்க்கலம்பகம் இயற்றியவர்

II. மயிலேறும்பெருமாள் என்பவரிடம் கல்வி கற்றார்

III. 250 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்

IV. அம்பலவாணதேசிகரிடம் தொண்டராய் இருந்தவர்

[A] I & II சரியானவை

[B] I, II & III சரியானவை

[C] II & IV சரியானவை

[D] இவை அனைத்தும் சரியானவை

47) தாயுமானவருக்கு ஞானநெறி காட்டியவராக கருதப்படுபவர்

[A] ஆறுமுக நாவலர் [B] மௌன குரு

[C] கோவூரார் [D] நாராயண குரு

48) தனித்து இயங்கும் எழுத்துக்கள்________________

[A] சார்பெழுத்து [B] ஆய்தஎழுத்து

[C] முதலெழுத்து [D] இம்மூன்றும்

49) ஆய்தம் __________________ வகையைச் சார்ந்தது

[A] முதல் எழுத்து [B] உயிர்மெய் எழுத்து

[C] சார்பெழுத்து [D] மெய்எழுத்து

50) தமிழ் எழுத்துக்களில் உயிரெழுத்து (குறில்)-க்கு வழங்கப்படும் கை நொடிப்பொழுது

[A] அகர மாத்திரை [B] ஒரு மாத்திரை

[C] இரு மாத்திரை [D] கால் மாத்திரை

51) சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளை தருவது

[A] யா [B] ஒ

[C] ஏ [D] எ

52) தமிழ்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

[A] இரண்டு [B] மூன்று

[C] நான்கு [D] ஐந்து

We Shine Academy™

53) “நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ; அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ” என்ற புறநானூறு பாடலில் “அவல்” என்பதன் எதிர்ச்சொல்

[A] வசை
[B] இசை
[C] தசை
[D] மிசை

54) மொழிக்கு இறுதியாக வரும் சரியான மெய் யெழுத்து தொடரை குறிப்பிடுக?

[A] ட், ற், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ்
[B] ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ்
[C] ஞ், ன், ந், ம், ண், ய், ர், ல், வ், ழ்
[D] க், ச், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ்

55) “வானரங்கள் கனிகொடுத்து மந்தியொரு கொஞ்சும் மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர் கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைவிப்பார்”- இங்கு வான்கவிகள்- கமனசித்தர் என்பது

[A] வான்வழி முனிவர்கள் - தேவர்கள்
[B] தேவர்கள் - வான்வழி சித்தர்கள்
[C] கூவும் குயில்கள்- காசப முனிவர்
[D] பாடும்கானப்பறவைகள் - சிவபெருமான்.

56) பின்வருவனவற்றில் குமரகுருபரர் எழுதாத நூல்

[A] நீதிநெறி விளக்கம்
[B] மதுரைக் கலம்பகம்
[C] இரட்டைக் கலம்பகம்
[D] கந்தர் கலிவெண்பா

57) தொண்டை நாடு ____________________

[A] வேழமுடைத்தது
[B] சோறுடைத்தது
[C] சான்றோர் உடைத்து
[D] முத்துடைத்து

58) “நீர் நிற்க; நான் இருக்க; இந்த சிறப்பு ஒன்று போதாதா” என்று மன்னனிடம் பதிலளித்தவர்

[A] கோவூர்கிழார்
[B] ராமானுஜ கவிராயர்
[C] மருதவாணர்
[D] பட்டினத்தடிகள்

59) “தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்தற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்” என்று கூறியவர்

[A] மறைமலையடிகள்
[B] பரிதிமாற்கலைஞர்
[C] மொழி ஞாயிறு
[D] பாவலேறு

60) பெண்கள் பாடும் அம்மானை பாடலில் போற்றப்படும் தெய்வம்

[A] நான்முகன்
[B] சேயோன்
[C] ஈசன்
[D] மாயோன்

61) திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது

[A] 96
[B] 107
[C] 118
[D] 89

62) 1917-ம் ஆண்டு எந்த நகரில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் காந்தி பங்கேற்றார்

[A] சூரத்
[B] புரோச்
[C] அலகாபாத்
[D] அகமதாபாத்

63) பின்வரும் சொற்களில் முற்றுப் போலியை தேர்ந்தெடுக்க

[A] முரசு
[B] மஞ்சு
[C] அஞ்சு
[D] பந்தல்

64) இராமானுஜர் பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?

I. இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டவர் ஆர்தர் பெர்சி
II. பெர்னௌலிஸ் எண்கள் என்ற தலைப்பில் இராமானுஜம் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்
III. 22.12.1887-ல் இராமானுஜர் பிறந்தார்
IV. 1911-ம் ஆண்டு இராமானுஜர் இங்கிலாந்து சென்றார்

[A] I மட்டும் II சரியானவை
[B] II மட்டும் III சரியானவை
[C] I, II மட்டும் III சரியானவை
[D] இவை அனைத்தும் சரியானவை

We Shine Academy™

65) மஞ்சள்சிட்டு என்ற பறவை எப்பகுதிகளில் வாழும் என அறியப்படுவது

[A] மலைப் பகுதிகளில் [B] சமவெளிப் பகுதிகளில்

[C] காடுகளில்

[D] அதிக உப்புத்தன்மையுள்ள பகுதி

66) முயற்சி திருவினை ஆக்கும் எனக் கூறியவர்

[A] பாரதிதாசன் [B] பாரதியார்

[C] திருவள்ளுவர் [D] ஔவையார்

67) பஞ்சகவ்வியம் என்பது எதன் ஐந்து பொருள்கள்

[A] கோமயம், பால், வெண்ணெய், சந்தனம், தயிர்

[B] நெய், பால், தயிர், சாணம், மஞ்சள்

[C] கோமயம், சாணம், பால், தயிர், நெய்

[D] நெய், பால், சாணம், தயிர், மஞ்சள்

68) கீழ்க்கண்டவற்றில் பிறமொழி கலவாத தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்க

[A] ஐதிகம் [B] இசைவு

[C] ஆதவன் [D] குபேரன்

69) திருநந்திக்கரையில் யாருடைய கால ஓவியங்கள் கிடைத்துள்ளன

[A] சேரர் [B] சோழர்

[C] பாண்டியர் [D] பல்லவர்

70) உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளை தேர்ந் தெடுத்து எழுதுக

"கனியிருக்க காய் விரும்பியது போல"

[A] இயலாமை [B] அறியாமை

[C] முயலாமை [D] விருப்பமின்மை

71) ."தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவர்"- இப்பாடலில் வந்துள்ள அணி

[A] இயல்பு நவிற்சியணி [B] உயர்வு நவிற்சியணி

[C] இல்பொருள் உவமை அணி

[D] எடுத்துக்காட்டு உவமை அணி உழைக்கும்

72) இன்சொலால் ஈரம் அளைஇம் <u>படிறு</u>இலவாம் செம்பொருள் கண்டார் வாய் சொல்- இதில் படிறு

[A] பாவம் [B] துன்பம்

[C] அன்பு [D] வஞ்சம்

73) கவிஞர் கண்ணதாசனின் புனைப்பெயர்கள் எவை?

I.கமகப்பிரியா
II.சத்திமுத்துப் புலவர்
III.ஆரோக்கிய நாதன்
IV.வணங்காமுடி
V.பார்வதி நாதன்

[A] I, II & IV மட்டும்

[B] I, III, IV & V மட்டும்

[C] I, III & V மட்டும்

[D] இவை அனைத்தும்

74) "தமிழ் என்று தோள் தட்டி ஆடு- நல்ல தமிழ் வெல்க என்றே தினம் பாடு" - என்று பாடியவர்

[A] கவிஞர் முடியரசன்

[B] மகாகவி பாரதியார்

[C] புரட்சிக்கவி பாரதிதாசன் [D] கவிஞர் சுரதா

75) தொண்ணுற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர் உள்ள நூல்?

[A] குறிஞ்சித் திரட்டு [B] முல்லைப் பாட்டு

[C] மதுரைக் காஞ்சி [D] குறிஞ்சிப் பாட்டு

76) பெயர்ச் சொல்லின் வகையறிதல்
பாம்பாட்டிச்சித்தர்; குதம்பை சித்தர்; அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே

[A] இடுகுறிப் பொதுப்பெயர்

[B] காரணப் பொதுப்பெயர்

[C] காரணப் சிறப்புப்பெயர்

[D] இடுகுறிப் பொதுப்பெயர்

77) "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்" எனக் குறிப்பிடும் இலக்கியம்

[A] மூதுரை [B] நாலடியார்

[C] பழமொழி நானூறு [D] நாண்மணிக் கடிகை

We Shine Academy™

78) “நான்மணிமாலை” என்ற சொற்டொர் குறிப்பது

[A] முத்து, பவளம், வைடூரியம், மாணிக்கம்

[B] முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்

[C] முத்து, மரகதம், செம்பு, மாணிக்கம்

[D] முத்து, பவளம், வைரம், மாணிக்கம்

79) கீழ்க்கண்டவற்றில் காணப்படும் எந்த சரணாலயம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமையப்பெறவில்லை

[A] கஞ்சிரங்குளம் புகலிடம்

[B] கரிக்கிளி புகலிடம்

[C] சித்திரங்குடி புகலிடம்

[D] மேலசெல்வனூர் புகலிடம்

80) தமிழர்களின் வரலாறு பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூலாக திகழும் தமிழ்க் கருவூலம்?

[A] அகநானூறு [B] புறநானூறு

[C] குறிஞ்சிப்பாட்டு [D] குறுந்தொகை

81) நட்பு எழுத்துக்களை கீழ்க்கண்ட எந்த எழுத்துக்களாக மரபிலக்கணம் வரையறுக்கிறது?

[A] இரட்டை எழுத்துக்கள்

[B] வழி எழுத்துக்கள்

[C] சிலேடை எழுத்துக்கள்

[D] இன எழுத்துக்கள்

82) விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுக்க “கற்றோர்க்கு ஆற்றுணா வேண்டுவது இல்”

[A] ஆற்றுணா வேண்டுவது இல்-எது

[B] ஆற்றுணா வேண்டுமா? வேண்டாமா?

[C] எதற்கு ஆற்றுணா வேண்டும்?

[D] கற்றோர்க்கு எது வேண்டுவதில்

83) கவிஞர் தாராபாரதி எழுதாத கவிதை நூல்

[A] புதிய விடியல்கள்

[B] இது எங்கள் கிழக்கு

[C] இன்னொரு சிகரம்

[D] சிகரம் தொடுவோம்

84) முதுமொழிக்காஞ்சி காணப்படும் திணையின்துறை

[A] வெட்சி [B] கரந்தை

[C] வஞ்சி [D] காஞ்சி

85) சோழர்க்குரிய மாலை________________

[A] பனம்பூ [B] வேப்பம்பூ

[C] ஆத்திப்பூ [D] தாமரைப்பூ

86) 1962 டிசம்பர் 22-ம் நாளன்று கணித மேதை ராமானுஜத்தின் எத்தனையாவது (பிறந்த) விழாவினை முன்னிட்டு நடுவண் அரசு அஞ்சல் தலையை வெளியிட்டது.

[A] வைர விழா [B] பிளாட்டின விழா

[C] வெள்ளி விழா [D] தங்க விழா

87) சேவல் என்பதன் எதிர்ப்பால் பெயர்______________

[A] பேடு [C] கன்று

[C] குருளை D] குட்டி

88) முதுமொழிக்காஞ்சி பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?

I.இது அறவுரைக்கோவை என்றும் வழங்கப்படுகிறது

II.இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன

III.இது உலகியல் உண்மைகளை தெளிவாக எடுத்து இயம்புகிறது

IV.இந்நூல் காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று

[A] I மட்டும் II சரியானவை

[B] II மட்டும் III சரியானவை

[C] I, II மட்டும் III சரியானவை

[D] இவை அனைத்தும் சரியானவை

89) புதுக்கவிதை தந்தை ந.பிச்சமூர்த்தி முதல் புதுக்கவிதை

[A] பெட்டிக்கடை நாராயணன் [B] கிளிக்கண்டு

[C] காதல்

[D] ஒளியின் அழைப்பு

We Shine Academy

90) மக்களின் துயரங்களை பொதுவுடைமை சிந்தனை களையும் தனது பாடல்களின் வழிபரவலாக்கியவர்

[A] தாரா பாரதி [B] கல்யாண சுந்தரம்

[C] புலமை பித்தன் [D] மருதகாசி

91) ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ______ முடிவது சிறப்பு

[A] ஆகாரத்தில் [B] ஏகாரத்தில்

[C] ஒகாரத்தில் [D] ஈகாரத்தில்

92) மயிலுக்கு போர்வை போர்த்திய வள்ளல்________

[A] அதீதி [B] காரி

[C] ஒரி [D] பேகன்

93) யானயை வதம் செய்து அதன் தோலை தன் மீது உடுத்திக் கொள்ளும் ஈசனின் வடிவம்

[A] வேழம் வரி போர்த்தவர்

[B] கஜசம்ஹாரமூர்த்தி

[C] திரிபுராந்தகன்

[D] லிங்கோத்பவர்

94) தனிப்பாடல் திரட்டு என்னும் நூலைத் தொகுத்தவர்

[A] காளமேகப் புலவர்

[B] கணக்காயனார் மகனார் நக்கீரனார்

[C] சந்திரசேகரகவிராசப் பண்டிதர்

[D] அம்பலவாணதேசிக பண்டிதர்

95) பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை

[A] 4 [B] 6 [C] 8 [D] 10

96) புதுக்கோட்டை சித்தன்ன வாசல் குகைக் கோயில் ஓவியங்கள் யாருடைய காலத்தில் தீட்டப்பட்டன

[A] முதலாம் மகேந்திரவர்ம பல்லவன்

[B] அவனிபசேகர ஸ்ரீ வல்லபன் [C] அவனி சிம்மன்

[D] இரண்டாம் நரசிம்மவர்மன்

97) பெரும்பொழுது என்பது

[A] ஒரு நாளின் ஆறு கூறுகள்

[B] ஒரு வாரத்தின் ஆறு கூறுகள்

[C] ஓராண்டின் ஆறு கூறுகள்

[D] ஒரு பருவத்தின் ஆறு கூறுகள்

98) பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க

| | பட்டியல் ஒன்று | | பட்டியல் இரண்டு |
|---|---|---|---|
| a | சுந்தரபாண்டியன் | 1 | மாணிக்கவாசகர் |
| b | உக்கிரகுமாரப்பாண்டியன் | 2 | திருஞானசம்பந்தர் |
| c | கூன்பாண்டியன் | 3 | செவ்வேள் |
| d | அரிமர்த்தப்பாண்டியன் | 4 | சிவபெருமான் |

| | A | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

99) பிழையாகபொருந்திஇருப்பது

[A] பழனிமலை- பேகன்

[B] பொதியமலை- குமணன்

[C] பறம்புமலை- பாரி

[D] குதிரைமலை-அதியமான்

100) இரட்டுறமொழிதல் பாடுவதில் வல்லவரான காளமேகப்புலவர்

I. திருவரங்கக்கோவில் மடப்பள்ளியில் பணிபுரிந்தார்
II. சைவசமயத்தில் இருந்து வைணவ சமயத்திற்கு மாறியவர்
III. இயற்பெயர் வரதன்
IV. இரட்டைமணிமாலையை இயற்றியவர்

[A] I & II மட்டும் சரியானவை

[B] I & III மட்டும் சரியானவை

[C] I, II & IV மட்டும் சரியானவை

[D] இவை அனைத்தும் சரியானவை

We Shine Academy™

## MOCK TEST - 06 ANSWER KEY

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 11 | B | 21 | B | 31 | B | 41 | B | 51 | C | 61 | B | 71 | A | 81 | D | 91 | B |
| 2 | B | 12 | A | 22 | B | 32 | A | 42 | D | 52 | C | 62 | B | 72 | D | 82 | D | 92 | D |
| 3 | D | 13 | C | 23 | D | 33 | B | 43 | B | 53 | D | 63 | C | 73 | B | 83 | D | 93 | B |
| 4 | D | 14 | B | 24 | C | 34 | D | 44 | C | 54 | B | 64 | B | 74 | C | 84 | D | 94 | C |
| 5 | B | 15 | D | 25 | C | 35 | C | 45 | D | 55 | B | 65 | B | 75 | D | 85 | C | 95 | B |
| 6 | B | 16 | C | 26 | C | 36 | C | 46 | C | 56 | C | 66 | C | 76 | C | 86 | B | 96 | B |
| 7 | B | 17 | B | 27 | C | 37 | B | 47 | B | 57 | C | 67 | C | 77 | C | 87 | A | 97 | C |
| 8 | B | 18 | B | 28 | B | 38 | B | 48 | C | 58 | D | 68 | B | 78 | B | 88 | D | 98 | A |
| 9 | D | 19 | A | 29 | A | 39 | C | 49 | C | 59 | C | 69 | A | 79 | B | 89 | C | 99 | B |
| 10 | A | 20 | D | 30 | C | 40 | D | 50 | B | 60 | B | 70 | B | 80 | B | 90 | B | 100 | B |

We Shine Academy